பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

25 09 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் பல்வேறு திட்டப் பணிகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.
- லடாக்கிற்கான மாநில அந்தஸ்து கோரிக்கை தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டியதை உறுதி செய்வதன் முக்கியத்தும் குறித்து மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.
- சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிராவின் விதர்பா பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- Jingshan ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்விக் போலிபள்ளி - அர்ஜுன் கதே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் இன்று பயணம் மேற்கொள்கிறார்.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெறும் உத்தரப்பிரதேச சர்வதேச வர்த்தக கண்காட்சியை தொடங்கி வைத்து அவர் உரையாற்ற உள்ளார்.

இம்மாதம் 29ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த வர்த்தக கண்காட்சியில் கைவினைப் பொருட்கள், தோல் பொருட்கள், வேளாண்மை உள்ளிட்ட முக்கிய துறைகள் இதில் இடம்பெறுகின்றன.

அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் செல்லும் பிரதமர், ஒரு லட்சத்து 22 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நிறைவடைந்த பணிகளை மக்களுக்கு அர்ப்பணிக்கிறார்.

பஞ்ச்வாராவில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்ற உள்ளார்.

மேலும் பிரதமரின் வேளாண் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு இயக்க பயனாளிகளுடனும் அவர் கலந்துரையாட உள்ளார்.

19 ஆயிரத்து 210 கோடி ரூபாய் மதிப்பிலான பசுமை எரிசக்தி திட்டத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

லடாக்கிற்கான மாநில அந்தஸ்து கோரிக்கை தொடர்பாக லே நிர்வாக அமைப்பு மற்றும் கார்கில் ஜனநாயக கூட்டணியுடன் மத்திய அரசு பேச்சு நடத்தி வருவதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இது தொடர்பாக உயர்நிலைக் குழு மூலம் பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக லடாக் பழங்குடியின மக்களுக்கான இடஒதுக்கீடு 45 சதவீதத்தில் இருந்து 84 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

அத்துடன் உள்ளாட்சி அமைப்புகளில் மூன்றில் ஒரு பகுதி மகளிருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

Bhoti மற்றும் Purgi மொழிகள், அலுவல் மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயிரத்து 800 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்றும், நாளையும் லடாக் தலைவர்களுடன் உயர்நிலைக் குழு பேச்சு நடத்த உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே லே-வில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து அங்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

முன் அனுமதியின்றி பேரணி நடத்துக் கூடாது என்றும், லே மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் 5 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்றாக கூடக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ள லடாக் துணைநிலை ஆளுநர் திரு. கவீந்தர் குப்தா, மக்கள் அமைதி காக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய அரசு பேச்சு நடத்த தயாராக இருப்பதாகவும், லே-யில் நடைபெற்ற வன்முறை சம்பங்கள் லடாக்கின் வரலாற்று பாரம்பரியத்திற்கு எதிரானது என்றும் கூறியுள்ளார்.

லடாக்கின் எதிர்காலத்திற்காக செயலாற்றுமாறு மக்களையும், மத அமைப்பினரையும் துணைநிலை ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<>>>>**

விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டியதை உறுதி செய்வதன் முக்கியத்தும் குறித்து மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய பயிர் பாதுகாப்பு கூட்டமைப்பின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், சர்வதேச சந்தையில் நிலவும் ஏற்ற இறக்கங்கள் காரணமாக விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்று தெரிவித்தார்.

வேளாண் ரசாயன தொழில்துறையை வளர்ச்சியடையச் செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

உலக அளவில் வேளாண் ரசாயன தொழில் துறையில் இந்தியா 3வது மிகப்பெரிய ஏற்றுதியாளராக திகழ்கிறது என்று அவர் தெரிவித்தார்.

உயர்தரமான பூச்சிக்கொல்லி மருந்கள், உரங்களை தயாரிப்பதன் மூலம் வேளாண் துறையில் சுயசார்பு என்ற இலக்கை அடைய முடியும் என்று திரு. நிதின் கட்கரி குறிப்பிட்டார்.

**<<<<>>>>**

தென்கொரியாவின் Busan நகரில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு இடையே Krafton நிறுவன தலைமைச் செயல் அதிகாரி திரு. Changhan Kim-ஐ தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், விளையாட்டு, அனிமேஷன் மின்னணு விளையாட்டு துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் துறையில் சிறந்து விளங்கும் இந்தியாவில் முதலீடு செய்யுமாறும் Krafton நிறுவனத்திற்கு தாம் அழைப்பு விடுத்ததாகவும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கொரிய நாட்டு கலாச்சாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா குழுவின் உறுப்பினர்கள் Kim Jae - Won மற்றும் Jin Jong Oh ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா - கொரியா இடையேயான இணை தயாரிப்பு ஒப்பந்தத்தை வலுப்படுத்துதல்,

கலாச்சாரம் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, OTT தளம் ஆகியவை தொடர்பாக டாக்டர் எல். முருகன் விவாதித்ததாக கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

பீஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையின் முதல் பகுதியை காங்கிரஸ் மற்றும் ராஷ்டிரிய ஜனதாதள கட்சி தலைமையிலான கூட்டணி வெளியிட்டுள்ளது.

பட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், விகாஸ் ஷீல் இன்சான் கட்சித் தலைவர் திரு. முகேஷ் சஹானி மற்றும் இடதுசாரி கட்சித் தலைவர்கள் ஆகியோர் இணைந்து இந்த தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர்.

உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு பணிகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அகில இந்திய புலிகள் மதிப்பீட்டுப் பயிற்சியாளர்களுக்கு தென்மண்டல அளவிலான பயிற்சி நீலகிரி மாவட்டம் முதுமலையில் தொடங்கியது.

இப்பயிற்சியில் வனவிலங்கு ஆராய்ச்சி நிறுவன நிபுணர்கள், வனச்சரகர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிராவின் விதர்பா பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகள், ஆந்திரப்பிரதேசம், கேரளா, கோவா, ஒடிசா, தெலங்கானா மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

Jingshan ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரித்விக் போலிபள்ளி - அர்ஜுன் கதே இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் Omar Jasika - கஜகஸ்தானின் Denis இணையை வென்றது.

<<<<>>>>

Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன் - எம்.ஆர். அர்ஜுன் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை, 23-21, 21-18 என்ற செட் கணக்கில் தைவானின் Sheng Fa Chen - Lu Chen இணையை வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் நிதின் குமார் - ரித்திகா தாக்கர் இணை, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான சூப்பர்-4 சுற்றுப் போட்டியில் இந்தியா 41 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் பேட்செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 168 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக தொடக்க வீரர் அபிஷேக் சர்மா 37 பந்துகளில் 75 ரன் எடுத்தார்.

169 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களறமிறங்கிய பங்களாதேஷ், 19 புள்ளி 3 ஓவரில் 127 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெற உள்ள பங்களாதேஷ்-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

<<<<>>>>

இந்தியா ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலிய ஏ அணி தமது இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 16 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>